**<u>முதன்மை மாவட்ட நீதிமன்றம், கரூர்.</u>**

**<u>அ.வ.எண்.247/2022</u>**

2026–ம் வருடம் மார்ச் திங்கள் 09–ம் நாளன்று வாதி தரப்பு சாட்சியாக வா.சா.4–வது நபரின் வாக்குமூலம் (1969ம் ஆண்டின் 54 விதியின்படி 95வது பிரிவின்படி ஏற்பட்டுள்ளபடி திரு.பிரகாஷ், இளநிலை உதவியாளர் அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்யப்பட்டுள்ளது.

| | | | |
|---|---|---|---|
| **பெயர்.** | **: ஜனகன்** | **தொழில்** | **:** |
| **த/பெ.** | **:** | **வட்டம்** | **:** |
| **முகவரி** | **:** | **மதம்** | **:** |
| **ஜாதி** | **:** | **வயது** | **:** |

**<u>முதல் விசாரணை</u>:–**

நான் இவ்வழக்கில் 4 ஆம் வாதி ஆவேன். என்னுடைய முதல் விசாரணை சாட்சியத்தை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அது என்னுடைய தகவலின் பேரில் தயாரிக்கப்பட்டு, அதை நான் படித்து பார்த்து கையெழுத்திட்டேன். கடந்த 21.01.2013 ஆம் தேதி முதல் 09.09.2023 ஆம் தேதி வரையுள்ள தாவா சொத்து துளசிதரன் பெயரில் உள்ள சொத்து வரி இரசீதுகள் (எண்ணிக்கை – 10) அசல் வா.சா.ஆ.17. ஆக குறியீடு செய்யப்படுகிறது. கடந்த 11.03.2008 ஆம் தேதி முதல் 23.04.2021 ஆம் தேதிய வரையுள்ள தாவா சொத்தில் துளசிதரன் பெயரில் உள்ள குடிநீர் வரி இரசீதுகள் (எண்ணிக்கை – 10) அசல் வா.சா.ஆ.18. ஆக

குறியீடு செய்யப்படுகிறது. கடந்த 13.09.2022 ஆம் தேதியிலான கரூர் கூட்டுறவு வீடு கட்டும் சங்கம் லிட்–யில் துளசிதரன் பெயரில் உள்ள கடனை நான் செலுத்தியதற்கான ரொக்க இரசீது (எண்ணிக்கை – 1) அசல் வா.சா.ஆ.19. ஆக குறியீடு செய்யப்படுகிறது. கடந்த 17.09.2022 ஆம் தேதிய கரூர் கூட்டுறவு வீடு கட்டும் சங்கம் லிட்–யில் துளசிதரன் பெயரில் உள்ள கடனை நான் செலுத்தியதற்கான ரொக்க இரசீது மற்றும் ஈடுதல் இரசீது (எண்ணிக்கை – 3) அசல் வா.சா.ஆ.20. ஆக குறியீடு செய்யப்படுகிறது. வழக்குப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

ELAVAZHAGAN

Digitally signed by ELAVAZHAGAN
Date: 2026.03.09 19:14:59 +0000

மாவட்ட நீதிபதி,
கரூர்.